# சைவத் தமிழ்ச் சங்கம்
# அருள்மிகு சிவன் கோவில்

www.sivankovil.ch, www.sivantv.com

## 7 வயதுப் பிரிவு

### தேவார மனனப்போட்டி

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

பொன்னார் மேனியனே புலித்
        தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்
        கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழ
        பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி
        யாரை நினைக்கேனே.

## திருவாசக திருமந்திர மனனப்போட்டி - 7 வயதுப் பிரிவு

முத்திநெறி அறியாத
மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப்
பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச்
சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா
றார்பெறுவார் அச்சோவே

பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால்
மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ.

அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

- பேச்சுப்போட்டி "தைத்திருநாள்" சுயதேடல்.
  (3 - 4 நிமிடம்)

அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளை இப்போட்டிகளில் பங்குகொள்ள வைப்பதன் மூலம் பிள்ளையின் தமிழறிவு, சமயஅறிவு, பண்பாடு, தமிழ் சமூகத்துடனான தொடர்பு என்பன வளர்ச்சியடையும். எனவே பரிசில்களை விட பங்குபற்றும் திறமையும், ஆர்வமும் மேலானது.